**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.42
https://ngmtamil.in/

# கங்காபுரம் நாவலில் தமிழரின் பண்பாட்டு மரபுகள்

**க.மல்லிகா**

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் கலையியல் புலம் எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம், காட்டாங்குளத்தூர்.செங்கல்பட்டு மாவட்டம்- 603 203. கைப்பேசி- 9176351339, Email- mg5270@srmist.edu.in

**முனைவர் சு.சரஸ்வதி,**

**நெறியாளர்,** துறைத்தலைவர், உதவிப்பேராசிரியர்

தமிழ்த்துறை, எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் கலையியல் புலம், எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம், காட்டாங்குளத்தூர்.செங்கல்பட்டு மாவட்டம்- 603 203.

கைப்பேசி-9442399476, Email-saraswas2@srmist.edu.in

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழர் பண்பாடு என்பது தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, பழக்கவழக்கங்கள், மொழி, கலை மற்றும் நம்பிக்கைகள் ஆகியவற்றின் தொகுப்பாகும். அது மக்களின் அடையாளத்தையும் நடத்தையையும் செம்மைப் படுத்துவதகாக அமைகிறது. கங்காபுரம் நாவலில் தமிழர்களின் புகழ், வீரம், விருந்தோம்பல், ஈகை, பொதுநலம் ஆகியவை தமிழர் பண்பாட்டின் அடிப்படையாக அமைந்துள்ளதையும் சோழப்பேரரசின் கோயில் வழிபாடுகளும், திருவிழாக்களும், நடனங்களும் தமிழ்ப் பண்பாட்டு மரபுகள் பதிவு செயப்பட்டுள்ளது. மேலும் சோழப் பேரரசின் அரசனான ராஜராஜன் காலத்தில் தில்லை மற்றும் தஞ்சைக் கோயில் வழிபாட்டின் சடங்குகளும் திருவாதிரை விழாவின் சிறப்புகளையும் கலைகளையும் மக்கள் எவ்வாறு பின்பற்றியிருந்தனர் என்பதையும் அ. வெண்ணிலாவின் கங்காபுரம் நாவல் முதல் பகுதி மூலம் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்**

தலைக்கோலிப் பெண்கள், குந்தளம், எக்காளம், தொய்யகம், வங்கியம், சிதாரி.

முன்னுரை

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

வரலாற்று நாவல் என்பது பண்டைய மக்களின் கடந்த கால நிகழ்வுகளின் தொகுப்பு மட்டுமன்று. அது ஒரு இனத்தின் வாழ்வியல், பண்பாடு மற்றும் மரபுகளை பிரதிபலிப்பதாகும். அந்த வகையில் பெண் எழுத்தாளர் அ.வெண்ணிலா அவர்களின் கங்காபுரம் நாவல் சோழப் பேரரசின் சமயமும், பக்தி மரபையும் சமூக அமைப்பின் வாழ்வியல் மரபையும் தமிழக வரலாற்று பண்பாட்டையும் வெளிப்படுத்துவதாக உள்ளது. அதாவது கங்காபுரம் நாவலில் கோயில் வழிபாடுகளில் மரபுகள் மற்றும் கலைகளை எவ்வாறு கடைப்பிடித்தனர் என்பதையும் சோழப் பேரரசான தில்லையில் நடைப்பெற்ற இன்றும் நடைபெறுகின்ற, மார்கழித் திருவாதிரை விழா பத்து நாட்கள் கொண்டாடப்படுகிறது. அவ்விழாவில் ஆடவல்லானை வழிபடும் முறையையும் பழக்கவழக்கங்களையும் சடங்குகளையும் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

**மார்கழித் திருவாதிரைவிழாவின் பண்பாட்டு மரபுகள்**

தில்லை ஆடவல்லான் ஆலயத்தில் திருவாதிரை விழா பத்து நாட்கள் கொண்டாடப்படுகிறது. ஒன்பது நாள்களும் கடும் பனியையும் பொருட்படுத்தாது நடராஜர் கோயிலில் ஓதுபவர்கள் பூசைகளில் ஈடுபடுகின்றனர். பத்தாவது நாள் விழாவில் அரசர்கள், அமைச்சர்கள், பண்டிதர்கள், சிவனடியார்கள், நடனக் கலைஞர்கள், தேவரடியார்கள், பறை இசைப்போர் என அனைவரும் கலந்து கொண்டு மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவின் சிறப்பு உணவாகத் திருவாதிரைக் களி வழங்கப்படுகிறது. தேவார மூவர்கள் அலங்காரம் செய்யப்பட்டு தேவாரம் பாடிவர, பாடவியம், வங்கியம், உடுக்கை, கொட்டி மத்தளம், சங்கு, பறை, நாதஸ்வரம் முழங்க, அரசரும் அமைச்சர்களும் அதிகாரிகளும் பின் தொடர்ந்து தில்லையை வலம் வருவார்கள். ஆயிரம் பசுக்கள், பண்டாரம் நிரம்பி வழியும் செல்வமும், ஆடவல்லானின் அருளை வேண்டித் தினமும் தில்லைக்கு வரும் சிவனடியார்கள் என முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. திருவிழாவுக்கு நான்கு மண்டலத்திலிருந்தும் மக்கள் வருகைத்தருவார்கள். அவர்களின் உணவுக்குத் தேவையான 'அரிசி, இலாமிச்சம், பருப்பு, மிளகு, சீரகம், தேங்காய், தாமரைத் தண்டு, பூசணிக்காய், சுரைக்காய், அவரை, நெய், புளி, தயிர், கொள்ளு, உப்பு, வாழையிலை, வெற்றிலை, பாக்கு , சிதாரி, கற்பூரம்' ( கங்காபுரம் நாவல்.ப.எ.191 ) எல்லாமே கோயில் பண்டாரமே வழங்குகிறார்கள்.

அலங்கரிக்கப்பட்ட தேர்கள் முதலில் விநாயகரும், அடுத்து முருகனும் சண்டேசுவரரும் சிவகாமி அம்மனும் கடைசியாக பெரிய தேரில் கூத்த பிரானையும் மக்கள் வடம் பிடித்து தேரை இழுத்துச் செல்வார்கள். தில்லை நடராஜருக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடல் பாடப்படுகிறது. "நடராஜனின் தங்கப் பாதங்களை ஊஞ்சலில் படுக்க வைத்து, அம்மையுடன் உறங்கும் வரை தாலாட்டுப் பாடி, காலையில் கண் விழிக்கச் செய்து, எம்பெருமாளின் கண் பார்வையிலேயே சேவகம்

செய்து கொண்டிருக்கும் தில்லைக் கோயிலின் தேவரடியார்கள்”(கங்காபுரம் நாவல் ப.எண் 61) என்ற வழக்கம் இருந்துள்ளது. ஆனால் இன்று அவை முற்றிலும் ஒழிக்கப்பட்டுள்ளது.

**விழாவில் ஆடல் மகளிர் அணியும் ஆடையும் அணிகலன்களும்**

பெண்கள் காதுகளில் பனையோலைக் குதும்பையைச் செருகிக் கொள்வது, குவளை மலர்களின் தாதுகளைத் தலைமுடிக்குள் வைத்து குந்தளம் போடுவது, இளம் நெற்கதிர்களை குந்தளத்தில் செருகிக்கொள்வார்கள். நாட்டியக் கலையில் சிறந்த தலைக்கோலிப் பெண்கள் பட்டாடையைத் தவிர்த்து நூலாடையை அணிவர். கையில் தாளமிட்டபடி, பதிகம் பாடுவர். இளம் ஆடல் மகளிர் பட்டாடை அணிந்து கால்களில் சிலம்பை அணிந்திருப்பர். ஒவ்வொருவரும் ஒரு தலை அலங்காரத்துடன் இருப்பர். தலையில் நேர் வகுட்டின் மீது தொய்யகம் (நெத்திச்சுட்டி) அணிவார்கள். தொய்யகத்தின் நுனி நெற்றியில் பிறை போலும், நேர்வகுட்டின் இருமருங்கிலும் சந்திர பிரபை, சூரிய பிரபை போன்று அணிவார்கள். வயதான ஆடல் மகளிர் பொன்னாலான குதும்பை, இளம் பெண்கள் மகர குண்டலமும், தோடும், ரத்தினங்கள் பதிக்கப்பெற்ற கடிப்பையும் அணிந்து தனி அழகில் ஒளிர்வார்கள். அணிவதற்குக் கூட இத்தனை வகையான அணிகலன்கள் இருக்கின்றன என்பதை ஆடல் மகளிரைப் பார்த்தே மற்ற பெண்கள் அறிந்து கொள்வார்கள். இன்றும் நாட்டியப் பெண்கள் இவ்வகையான அணிகலன்களை அணிந்துகொண்டுதான் நடனம் ஆடுகின்றனர்.

**கோயில் வழிபாடுகளில் உள்ள மரபுகள்**

சோழர்காலத்தில் ராஜராஜன் அரசனாக இருந்த போது தில்லைக் கோயில் பணியாளருக்கு உதவியாக வடநாட்டில் இருந்து பார்ப்பனர்கள் வரவழைக்கப்பட்டார்கள். அவர்கள் வேதங்கள் சொல்லிப் பூசைகள் செய்வர். பண்டிதர்கள் தேவாரமும், திருப்பதிகங்களும் ஓதிப் பூசை செய்வார்கள். காலைச் சந்திப்பூசை முடிந்தவுடன் வில்வ இலை போட்ட நீரையே பிரசாதமாக வழங்குவர். ஆனால் பார்ப்பனர்கள் துளசி இலையை போட்ட நீரை வழங்குவர். செண்பகம், பன்னீர், செவ்வந்தி, நீலாம்பல், குவளை மலர்களை பூசைக்கு வைப்பார்கள். கார்த்திகை திருநாளில், இறைவன் வீதி உலா கிளம்பும் போது மத்தளமும், எக்காளமும் ஊதுவது வழக்கம். மாலை நேரத்தில் திருமுறைகள் படிக்கப்படும். தில்லைக் கோயிலின் கருவறையின் அமைப்பிலேயே தில்லையின் தேர் அமைந்திருக்கும்.

**விருந்தோம்பல் முறை**

அரசர் ராஜராஜனின் மகன் ராஜேந்திர சோழனுக்குப் பட்டம் சூட்டிய விழாவில் விருந்தினர்களை வெற்றிலையும் பாக்கும் கொடுத்து முதலில் வரவேற்றார்கள். பின்பு உணவுக் கூடத்தில் உள்ள மனைப் பலகையில் நீண்ட தலை வாழை இலைகள் போடப்பட்டிருந்தன. ”கடுக்காயும் நெல்லிக்காயும் ஊறிய நீரினைச் சிறு வட்டிலில் ஒவ்வொருவர் முன்பும் வைத்தார்கள்.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

நீரினைத் தொட்டு மூன்று முறை வாயைத் துடைத்துக் கொண்டு, சில துளிகளை வாயில் விட்டுக்கொண்டனர்"(கங்காபுரம் ப.எண்.147). சில துளிகளை கண்கள், காது, மூக்கு மற்றும் மேலாடையில் நீரை ஒற்றி எடுத்தனர் என கங்காபுரம் நாவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் வெள்ளி, தாமிரம் மற்றும் மண்ணிலான வட்டில்களில் முதலாக உப்பு வைக்கப்பட்டது. முல்லை அரும்பு போல் நீளமாக இருந்த அரிசி, செந்நெல்லில் வடித்த சோறு, கொக்கின் நகம்போல் நீண்ட வெண்மையான அரசிச் சோறு என அத்தனை வகையும் பரிமாறப்பட்டது. பாலில் செய்யப்பட்ட இனிப்பும் புளிக்கறிச் சோறும் பால் சோறும் தயிர்ச் சோறும் வழங்கப்பட்டன. மா, பலா, வாழை என முக்கனிகள் இலைகளின் ஓரத்தில் இருந்தது. தினை மாவும் தேனும் நெய்யும் கலந்து செய்யப்பட்ட பனியாரமும், வதக்கியும் வாட்டியும், பொரித்தும், தாளித்தும், செய்ததில் காய்கறிகள் விதவிதமாக பயன்படுத்தி இருந்தன. சாப்பிட்டு முடித்த பின் மலை வாழைப்பழமும், பழச்சாறும் இஞ்சியும் பானமும் வழங்கப்பட்டது என அ.வெண்ணிலா அவர்கள் கங்காபுரம் நாவலில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறாக இன்றும் நம் தமிழர் பண்பாட்டில் தலை வாழை விருந்தோம்பல் பல்வேறு நிகழ்ச்சிகளில் கடைப்பிடிக்கப்படுகிறது.

**கலைகளில் பண்பாடு**

திருவிழாவில் யானையைப் பின் தொடர்ந்து வீதியின் இருபுறமும் பக்கத்திற்கு ஒருவராக எக்காளம் ஊதுகின்றனர். பறை இசை கேட்டு மக்கள் தங்களின் வேலையை முடித்துக்கொண்டு வீதிக்கு வருகிறார்கள். எக்காளத்திற்குப் பின்னால், தாளமிடுபவர்களும் தவில், நாதஸ்வரம் வாசிப்பவர்களும், மத்தளம் வாசிப்பவர்களும் வாசித்தபடி சென்றனர்.

மேள வாத்தியத்திற்குப் பின்னால் ஆடல் மகளிர் இறைவனைப் பார்த்த வண்ணம் ஆடிக்கொண்டே சென்றனர். யானையின் நடையை விட ஊர்வலம் மெதுவாக செல்லக் காரணம் ஆடல் மகளிரின் நடனமும் அலங்காரமும்தான். நூற்றுக்கும் அதிகமான பெண்கள் ஆடுவதும், மற்ற பெண்கள் அவர்களின் ஆடலுக்கு ஆடவல்லானின் மேல் கொண்ட காதலும் பக்தியும் பெருகப் பாடினார்கள்.

கோயிலில் தெய்வச்சந்நிதியிலும் அதற்கென நிறுவப்பட்ட மண்டபத்திலும் நாட்டியம் நடைபெறும். அவை தெய்வப்படையலாகவும் ஆராதனையாகவும் கருதப்படும். "நாட்டியக் கலையை ஊக்குவிக்கும் நோக்கத்திலும் மக்கள் ஆர்வமுடன் கண்டு பயன்கொள்ளும் விதத்திலும் நாட்டிய மகளிரை தளிச் சேரிப் பெண்டிர்களைத் தஞ்சைப் பெரிய கோயிலில் அமர்த்தியமை பற்றிக் கல்வெட்டு உண்டு"(தமிழ்ப் பண்பாட்டு வரலாறு ப.எண்.160) ஆசிரியர் செ.வைத்தியலிங்கன் குறிப்பிட்டுள்ளார்

**சமயப் பணிகள்**

வாழ்நாள் முழுவதும் இடைவிடாப்போராட்டங்களில் ஈடுபட்டிருந்த ராஜராஜன் சமயப்பணியிலும் சிறந்து விளங்கினான். அதற்குத் தஞ்சை பெரிய கோயில் ஒப்பற்ற எடுத்துக்காட்டாகும். சைவத்திருமுறைகள் ஓயாது ஓதுபவர்களும் உடுக்கை மத்தளக்காரரையும் நியமித்து அதற்கென அறக்கட்டளை ஏற்படுத்தினான். அவர்களுக்குப் பணமும் நிலமும் கொடுத்து ஊக்கப்படுத்தினான். மாபெரும் வெற்றி வீரன், சிறந்த நிர்வாகி அறப்பணியாளன் என்று சிறந்த அரசர்கள் வரிசையில் வைக்கப்பட்டான்."10 நூற்றாண்டுகளுக்குப் பிறகும்கூட அவனுக்குச் சிலை எடுக்கப்பட்டது என்றால் தமிழக வரலாற்றில் அவன் அடைந்திருந்த இடத்தை உணரலாம்" (தமிழக வரலாறும் பண்பாடும் ப.எண் 278) வே.தி.செல்லம் அவர்கள் கூறியுள்ளார்.

**முடிவுரை**

தமிழர் பண்பாடு என்பது ஒரு இனத்தின் அடையாளமாகும். அந்த வகையில் அ.வெண்ணிலாவின் 'கங்காபுரம்' நாவல் சோழர் காலத்துத் தமிழக வரலாற்றை வெறும் போர்க்களங்களின் தொகுப்பாக இல்லாமல், அக்கால மக்களின் வாழ்வியல் விழுமியங்களை மீட்டெடுப்பதாக உள்ளது. மாபெரும் வெற்றி வீரனாகவும், சிறந்த நிர்வாகியாகவும் திகழ்ந்த ராஜராஜ சோழன் அவர்கள் சைவத் திருமுறைகளை ஓதுவதற்கும் கலைகளை வளர்ப்பதற்கும் அறக்கட்டளைகளை நிறுவிச் சமயப்பணி ஆற்றியுள்ளார். பல நூற்றாண்டுகள் கடந்தும் தமிழக வரலாற்றில் அழியா இடம்பெற்றுள்ள சோழர் காலத்துத் தமிழ் பண்பாட்டு மரபுகள், விருந்தோம்பல் கலைகள் மற்றும் வழிபாடுகள் நம் வாழ்வில் நிலைத்து நிற்கின்றன என்பதை இக்கட்டுரை மிகச் சிறப்பாக கூறியுள்ளது.

**துணை நூற்பட்டியல்**

1. செல்லம்.வே.தி, தமிழக வரலாறும் பண்பாடும், மணிவாசகர் பதிப்பகம், ஜனவரி 2009

2. செல்வராசு.நா, பண்டைத் தமிழர் திருமண வாழ்க்கை, மணி ஆப்செட், டிசம்பர் 2009

3. தட்சாணாமூர்த்தி.அ, தமிழர் நாகரிகமும் பண்பாடும், அமர் ஆப்செட்,ஜூலை 2008

3. வெண்ணிலா.அ, கங்காபுரம் முதல் பகுதி , அகநி வெளியீடு, டிசம்பர் 2018 .

4. வைத்தியலிங்கன்.செ, தமிழ்ப் பண்பாட்டு வரலாறு, அபிராமி ஆப்செட் பிரிண்டர்ஸ், 2002.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)